**செய்தி வெளியீடு எண்:316** **நாள் : 1.07.2016**

## செய்தி வெளியீடு

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறையில் அரசு மற்றும் சுயநிதி மருத்துவக் கல்லூாிகளில் (அரசு ஒதுக்கீடு இடங்களுக்கு) 2016–2017 ஆம் ஆண்டிற்கு ஒற்றை சாளர முறைapy; **பி.எஸ்.எம்.எஸ். / பி.ஏ.எம்.எஸ். / பி.என்.ஒய்.எஸ். / பி.யு.எம்.எஸ். / பி.எச்.எம்.எஸ்.** பட்டப்படிப்பில் சேர்வதற்கான விண்ணப்பங்கள் மேல்நிலைப்பள்ளி தேர்வில் வெற்றி பெற்றவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. 6 அரசு இந்திய முறை மருத்துவக் கல்லூாிகளில் 356 இடங்களும், 21 சுயநிதி கல்லூாிகளில் 809 இடங்களும் உள்ளன. கல்லூாிகளில் உள்ள அரசு இட ஒதுக்கீடுகள் மத்திய அரசின் ஆயுஷ் துறையால் அங்கீகாிக்கப்படும் நிலையில் இட ஒதுக்கீடுகளின் எண்ணிக்கைகள் கலந்தாய்வின்போது மாறும் நிலை ஏற்படும். விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் தொகுப்பினை 28–06–2016 முதல் 28–07–2016 முடிய சென்னை, பாளையங்கோட்டை, திருமங்கலம் மற்றும் கோட்டார் அரசு இந்திய முறை மருத்துவக்கல்லூாி முதல்வர்களிடமிருந்து அலுவலக வேலை நாட்களில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம். பொது பிாிவு விண்ணப்பம் ரூ.500/– மற்றும் சிறப்பு பிாிவு விண்ணப்பம் ரூ.100/–. விண்ணப்பங்கள் பெற கடைசி நாள் 28.07.2016 மாலை 5.00 மணி வரை. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தேர்வு குழுவிற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் 29.07.2016 மாலை 5.00 மணிக்கு முன்னதாக அல்லது 5.00 மணிக்குள் வந்து சேர வேண்டும். தாமதமாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேலும் இதுகுறித்து எந்த தகவலும் தனியருக்கு தொிவிக்கப்படமாட்டாது. மேலும் விவரங்களுக்கு , இணையதள முகவாி: http/www.tnhealth.org. பார்க்கவும்.

கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர்
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை
சென்னை –106.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**